செயற்பொறியாளர் அலுவலகம் பொ.ப.து. நீர்வள ஆதாரத்துறை சோலையாறு வடிநிலக் கோட்டம்,வால்பாறை-642127

முன்னிலை - பொறி. அ. ஆனந்தன் பி.இ.,
செயற்பொறியாளர், நீஆது.

செயல்முறை ஆணை எண் - ஆட்சி (1) கோ7/2019 நாள்- .11.2020

பொருள்- பணியமைப்பு - பொதுப்பணித்துறை தமிழ்நாடு அமைச்சு பணித்தொகுதி - செல்வி எஸ்.சௌமியா இளநிலை உதவியாளர் தமிழ் நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018ம் ஆண்டுக்களுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி IVல் அடங்கியஇளநிலை உதவியாளர் பதவிக்கு பணி வேட்பாளர்களை தெரிவு செய்து பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை ஆணை வழங்குதல் தொடர்பாக.

பார்வை-

1. செயலாளர் தமிழ்நாடு அமைச்சுப்பணி தேர்வாணையம் சென்னை அவர்களின் கடித எண்: 1150/PA S-H2/2019 நாள்:18.02.2019
2. முதன்மை தலைமை பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமை பொறியாளர் (பொது) பொ.ப.து. சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 3(3)/25366/2019 நாள் 25.02.2019
3. தலைமை பொறியாளர் பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை கோவை மண்டலம் கோவை அவர்களின் செயல்முறை ஆணை எண் ஆ2/1874/2019 நாள்: 7.03.2019
4. கண்காணிப்பு பொறியாளர் பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை பரம்பிக்குளம் ஆழியார் வடிநிலவட்டம் பொள்ளாச்சி அவர்களின் செ.மு.ஆ.எண் ஆட்சி2/029/2019 நாள்: 8.03.2019
5. செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை சோலையார் வடிநிலக்கோட்டம் வால்பாறை அவர்களின் செ.மு.ஆ.எண்.ஆட்சி1/கோ -7 (029)/2019 நாள் 8.03.2019

-----

பார்வை எண். 1முதல் 5 வரை உள்ள செயல்முறை ஆணைகளின் படி தமிழ் நாடு அமைச்சுப்பணி தேர்வாணையம் தேர்வில் 2015 -2016 – 2017 மற்றும் – 2018ம் ஆண்டிற்க்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு இக்கோட்ட அலுவலகத்தில் 8.03.2019 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் செல்வி எஸ்.சௌமியா இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்வதற்க்கு தேவையான அனைத்து தகுதி மற்றும் வயது தகுதிகளை பெற்றுள்ளார் என அறியப்படுகிறது.

Scanned with CamScanner

செல்வி எஸ்.சௌமியா அவர்களின் பணிவரன் முறைக்கு தேவையான அனைத்து ஆவணங்களும் தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நன்கு பரிசீலனை செய்தபின்னர் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார் எனவே இவர் பணியில் சேர்ந்த நாளான 8.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் முறையாக நியமித்து பார்வை(2) காணும் முதன்மை தலைமை பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை தலைமை பொறியாளர் (பொது) பொபது. சேப்பாக்கம் சென்னை அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டபடி தேர்வாணையம் கடிதத்தில் மேற்குறிய பணிவேட்பாளர் இளநிலை உதவியாளர் பணியேற்க்கும் நாளினை அடிப்படையாக கொண்டு பணிவரன் முறை செய்யப்படும் போது இப்பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற சென்னை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையை பின்பற்றியும் தமிழ் நாடு அரசு ஊழியர் நிபந்தனை சட்டம் 2016 விதி 28(1)ன்படி பணியேற்ற நாளான 8.03.2019 முற்பகல் அன்று முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு முன்தேதியிட்ட பணிவரன்முறை செய்தவதால் ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை பெற அரசு விதிகளின் படி தகுதியுடையவராகிறார்.

27/11/2020

செயற்பொறியாளர் பொ.ப.து.நீ ஆது.
சோலையாறுவடிநிலக் கோட்டம்,
27/11/2020 வால்பாறை-642127

பெறுநர் :
செல்வி.எஸ்.சௌமியா,
இளநிலை உதவியாளர்,
சோலையாறுவடிநிலககோட்டம்,
வால்பாறை-642127.

நகல் பணிப்பதிவேடுக்கு
நகல் ஆட்சி(1) பிரிவு இருக்கைக் கோப்பிற்கு

Scanned with CamScanner